**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**
**கொழும்பு**

**ஊடக அறிக்கை**
*********************

## பிரதமர் மற்றும் அமைச்சர்களின் பதவியேற்பு வைபவத்துக்காக தலைவர்கள் வருகை

2024 பொதுத்தேர்தல்களை தொடர்ந்து பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி மற்றும் அமைச்சர்களின் பதவியேற்பு வைபவம் 2024 ஜூன் 9ஆம் திகதியன்று நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்காக, இந்தியாவின் அயல்நாடுகள் மற்றும் இந்து சமுத்திர பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாக அன்புடன் அழைக்கப்பட்டுள்ளனர்.

2. இலங்கை ஜனாதிபதி அதி மேதகு ரணில் விக்கிரமசிங்க, மாலைதீவுகள் ஜனாதிபதி அதி மேதகு கலாநிதி முஹம்மது முயிசு, சிசெல்ஸ் துணை ஜனாதிபதி அதி மேதகு அகமத் ஆபிப், பங்களாதேஷ் பிரதமர் அதி மேதகு ஷேய்க் ஹசீனா, மொரிசியஸ் பிரதமர் அதி மேதகு பிரவீந் குமார் ஜக்நாத், நேபாள பிரதமர் அதி மேதகு புஷ்ப கமால் தஹல் பிரசண்டா மற்றும் பூட்டான் பிரதமர் அதி மேதகு சேரிங் டொப்கே ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கான அழைப்பிதழை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

3. பதவியேற்பு வைபவத்தில் கலந்துகொள்ளும் தலைவர்கள் அன்றைய தினம் மாலை இராஷ்டிரபதி பவனில் ஜனாதிபதி ஸ்ரீமதி திரௌபதி முர்மு அவர்களால் வழங்கப்படும் விருந்துபசாரத்திலும் பங்கேற்கின்றனர்.

4. பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களது மூன்றாவது பதவிக்காலத்திற்கான பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொள்வதற்காக இத்தலைவர்கள் வருகை தருகின்றமை, இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மற்றும் சாகர் கோட்பாடு ஆகியவற்றுக்கு இந்தியாவால் வழங்கப்படும் உயர் முன்னுரிமையின் அடிப்படையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

*********************

**கொழும்பு**
**8 ஜூன் 2024**

https://www.mea.gov.in/press-releases.htm?dtl/37855/Visit_of_leaders_for_the_swearingin_ceremony_of_Prime_Minister_and_Council_of_Ministers